கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 26/2025

வாதி தரப்பு சாட்சி – 1 மூக்கன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 07.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை மற்றும் தாய் இறந்தற்கான சான்றிதழ் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த காலத்தில் பதிவு செய்யவில்லை. அந்த காலத்தில் கிராம நிர்வாக அலுவலரிடம் இறப்பை பதிவு செய்வது வழக்கம் என்றால் அது பற்றி தெரியாது.

2. தாவா சொத்து எனது தந்தை பூர்வீகமாக அனுபவம் செய்து வந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி அனுபவத்தை வைத்து தான் அரசாங்கத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எத்தனை சென்டிற்கு கொடுத்தார்கள் என்றால் ஏக்கர் 0.2 ½ சென்ட். ஊர் வழக்கப்படி சொத்துக்களை வாய்க்காரராக குடும்பத்தினர்கள் பிரித்து கொள்வது வழக்கம் என்றால் சரிதான். அதன்படி தலைக்கு 1 ¼ சென்ட் என்று நானும், பிரதிவாதியும் வாய்க்காரராக எப்போது பிரித்து கொண்டோம் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு பிரித்து கொண்டோம். மேற்படி பட்டாவை வாய்க்காரராக பிரித்து கொண்டபடி தனிபட்டா வாங்குவதில் தான் பிரச்சனை என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி எனக்கு பங்கை எனக்கு தர மறுக்கிறார். பிரதிவாதியின் பங்கில் அவர் வீடு கட்டியுள்ளது போல் எனது பங்கில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இந்திரா குடியிருப்பு திட்டத்தில் வீடு கட்டி கொடுத்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதியின் பங்கில் அவருக்கு தொகுப்பு வீடு கட்டி கொடுத்தார்கள். எனக்கு கொடுக்கவில்லை. மேற்படி இந்திரா தொகுப்பு வீடு திட்டத்தின்

கீழ் கட்டி கொடுத்தது கடந்த 2006−2007ம் வருடம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வடபுறமும், எனக்கு தென்புறம் வாய்க்காரராக பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. எனக்கு பிரிந்த தென்புற பாகத்தில் 2006−2007ல் இந்திரா குடியிருப்பு திட்டத்தில் வீடு கட்டி கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. எனது மகனுக்கும் மருமகளுக்கும் வீடு கொடுத்துள்ளார்கள். தாவா சொத்தில் தான் மேற்படி வீடு கட்டி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது வீட்டின் கதவு எண் நியாபகம் இல்லை. எனது பெயரில் வீட்டு வரி விதிப்பு உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் மற்றும் மருமகளுக்கும் கட்டி கொடுத்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது மருமகளை தான் கேட்க வேண்டும். மேற்படி வீட்டின் வரி விதிப்பு யார் பெயரில் உள்ளது என்றால் மருமகள் பெயரில் உள்ளது. மேற்படி இடம் எனது தந்தை பூர்வீகமாக அனுபவம் செய்து வந்த இடம் என்றும், அதில் தான் மேற்படி வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**